# குறுந்தொகையில் வெறியாட்டெனும் முருக வழிபாடு

**முனைவர் பீ. பெரியசாமி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி, ஆரணி

**ஆய்வுச் சுருக்கம்**

*குறிஞ்சி நிலக்கடவுளான முருகனுக்கு சங்ககாலத்தில் எடுக்கப்பட்ட விழாக்களுள் முதன்மையானது வெறியாட்டு என்பதாகும்.இதனை காந்தள் என்றும் அழைத்துள்ளனர்.இவ்வெறியாட்டு என்பது குறிஞ்சி நில மக்களின் பயத்தின் காரணமாகத் தோன்றிய விழா ஆகும். காதல் நோயுற்ற தலைவி தனிமை துயர் தாளாது இருக்கும் காலத்து, தாயானவள் அவளுக்கு நேர்ந்தது என்னவென்று அறியாமல், அகவன் மகளை அழைத்து குறிகேட்டும், விறிச்சி கேட்டும், இவளுக்கு முருகனால் துன்பம் ஏற்பட்டது என அவர்கள் கூறும்போது, அவள் வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்துவதற்குரிய ஏற்பாடுகளை செய்தாள். அவ்வாறு வெறியாட்டு நிகழ்த்தும் போது முருகனுக்கு ஆட்டுக்கிடாவை பலியிட்டு, தினை அரிசியால் ஆக்கிய சோற்றை படையலாகப் படைத்தனர்.இவ்வழிபாடு இன்று நாம் வழிபடும் முருக வழிபாட்டு மரபிலிருந்து முற்றிலும் வேறானது.*

***முக்கியச் சொற்கள்:*** *முருகன், வேலன், வெறியாட்டு, பலியிடுதல், வெறியாட்டு நிகழ்த்துமிடம், ஆடல், விழா, வெறியாடலுக்குக் காரணம்*

**முன்னுரை**

வெறியாட்டு என்பது பண்டையத் தமிழரின் மரபு வழிபாடு முறைகளுள் ஒன்று.இது முருகனை மையமிட்டு நடத்தப்படும் வழிபாடு.முருகன் இளம் பெண்களுக்கு காதல் நோய் கொடுப்பவனாக விளங்குகிறான்.காதல் மயக்கத்தைப் போக்க முருகன் சார்பாக வேலன் வெறியாட்டு அயர்வான்.வெறி என்ற சொல்லுக்கு மணம் என்ற பொருள் உண்டு.வெறியாடல் என்பதில் பழங்கால பெண்களின் அச்சம் காரணமாக தோன்றிய பக்தியின் இயல்பை அறியமுடிகிறது.

**குறுந்தொகையில் முருகன்**

முருகனைப் பற்றி சங்க இலக்கியங்களில் பல்வேறு குறிப்புகள் காணக்கிடக்கின்றன. குறிஞ்சி நிலத் தலைவனான முருகனின் மலையின் சிறப்பினை,

**"அகவன் மகளே! அகவன் மகளே!**
**மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்**
**அகவன் மகளே பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே" (குறுந்.23)**

எனத் தோழி கட்டுவிச்சியிடம் கூறுகிறாள். பாடும் பெண் மகளே! பாடும் பெண் மகளே! சங்கு மணியிலான மாலை போலுள்ள வெண்மையான தூய நீண்ட கூந்தலை உடைய பெண்மகளே பாடல்களைப் பாடுக, நீ பாடும் முருகனுடைய தூய நெடிய குன்றைப் பற்றிய பாடலை மீண்டும் மீண்டும் பாடுவாயாக எனக் கூறுகிறாள் தோழி. இதில் குன்றத்தின் மீது முருகனின் கோயில் இருந்தது என்பதை அறியமுடிகிறது.

**வேலன் வெறியாட்டு**

வெறியாட்டில் வழிபாடு நடத்துவோர் தான் வணங்கும் தெய்வமானது தன்மீது தோன்றி வெளிப்படும் எனும் நம்பிக்கையில் கூத்தாடினர். இதனை தொல்காப்பியர்,

**"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
**வெறியாட் டயர்ந்த காந்தளும்" (தொல்.பொருள். 63)**

எனும் நூற்பாவில் கூறியுள்ளார்.இதில், வேலன் வெறியாடலின் இயல்பினை அறிந்தவன். இவ்வெறியாடலுக்கும் காந்தள் என்ற பெயருண்டு என்பதை இந்நூற்பாவின் வாயிலாக அறியமுடிகிறது.

**வெறியாடலுக்குரிய காரணம்**

தலைவன் மடலேறுவேன் எனப்பொய்யாக உரைக்கும் போதும், தோழி கையற்றுத் தன் கண்ணீரைத் துடைக்கும் போதும், தாயார் தன் மகளின் நிலையறிந்து வெறியாட்டு நிகழ்த்த ஏற்பாடு செய்வாள். இதனால் தலைவி அச்சம் கொள்வாள். இதனை, தொல்காப்பியர்,

**"கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்**
**வெறியாட்டு இடத்து வெருவின் கண்ணும்"**
**(தொல்.கள.21)**

என்கிறார். மேலும்,

**கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்**

**ஒட்டிய திறத்தான் செய்திக் கண்ணும்**

**ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும்" (தொல்.கள.25)**

எனும் தொல்காப்பிய நூற்பாவானது, கட்டுப்பார்த்து சொல்பவள் குறிஞ்சி மலையில் வாழும் அகவன் மகள்.அவள் அரிசியைத் தூவி அதுவிழும் அமைப்பை நோக்கி குறி சொல்பவள்.அவள் குறிஞ்சிக் கடவுள் முருகனின் அணங்கினால் தலைவிக்கு பாதிப்பு உண்டாகியிருக்கிறது. அவனின் கோபம் தணிய வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த வேண்டும் எனச் சொல்கிறாள்.இதில் வேலன் என்பவன் வெறியாடலுக்குரிய வழிபாடு செய்பவன் என்பதனை அறியமுடிகிறது.

**வெறியாட்டுக்கு உரியவன்**

வெறியாட்டு முருகப்பெருமானுக்கு நிகழ்த்தப்படுவது என்பதைப் பல்வேறு சங்கப் பாடல்களின் வாயிலாக நாம் அறிந்திருப்போம். இதனை குறுந்தொகையில்,

**"மென்தோள் நெகிழ்த்த செல்லல் வேலன்**

**வென்றி நெடுவேள் என்னும் அன்னையும்**

**அதுவென உணரும் ஆயின் ஆயிடைக்**

**கூழை இரும்பிடிக் கைகரந் தன்ன**

**கேழிருந் துறுகற் கெழுமலை நாடன்**

**வல்லே வருக தோழிநம்**

**இல்லோர் பெருநகை காணிய சிறிதே"(குறுந்-111)**

எனும் பாடலில் தலைவன் வேலிப்புறத்தானாக நிற்க. அவன் உணர்ந்துக் கொள்ள வேண்டுதல் பொருட்டு தோழி, தலைவியிடம் சொல்லும் முகமாய் அமைந்த இப்பாடலில், என் தோள் மெலிவடைந்துவிட்டதற்கான காரணம் என்ன என்று ஆராய முற்பட்டாள் அன்னை. ஆதற்காக குறிசொல்பவர்களை அணுகினாள்.அதற்கு அவர்கள் இவள் மேல் முருகன் ஏறியுள்ளான் என்றனர். அதனை நம்பி அன்னையும் முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்த தயாராகிறாள். இந்தக் கேலிக் கூத்தைக் காண அவன் உடனே வருவானாக என்று கூறுகிறன் இதிலிருந்து வெறியாட்டுக்கு உரியவன் முருகனே என்பது அறியலாகிறது.

**வெறியாட்டு நடத்தப்படும் இடம்**

முருனுக்குரிய வெறியாட்டு நடத்துவதற்கென்று இடத்தை தெரிவு செயவது என்பது இயல்பு. இதனை குறுந்தொகையில்,

**"எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்**

**நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்**

**வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்**

**செந்நெல் வான்பொரி சிதறி யன்ன**

**எக்கர் நண்ணிய எம்மூர் வியன்துறை**

**நேரிறை முன்கை பற்றிச்**

**சூரர மகளிரோ டுற்ற சூளே"** (குறுந்-53)

எனக் கோப்பெருஞ் சோழன் கூறுகிறார். அன்பிற்கினிய தலைவனே! முன்னிடத்தில் உள்ள அரும்புகள் முதிர்ந்த புன்னை மரத்தின் மலர்கள் உதிர்ந்து பரந்து தங்கிய வெள்ளிய மணல் பரப்பில் வேலினால் அமைக்கப்பட்டுள்ள வெறியாட்டு எடுக்கும் இடந்தோறும் செந்நெல்லின் வெள்ளிய பொரி சிதறியதைப் போன்ற தோற்றத்தைத் தரும் மணல் மேடுகள் பொருந்திய எங்கள் ஊரிலுள்ள அகறை நீர்த்துறையில் நுண்ணியமூட்டுவாயை உடைய முன் கையைப் பற்றி தெய்வ மகளிரை முன்னிருந்தி செய்த சத்தியம் எம்மைத் துன்புறுத்தின எனக் கூறுவதாக இப்பாடல் அமைத்துள்ளது. இதில் வெறியாட்டு நிகழ்த்தப்படும் இடம் எவ்வாறு அலங்கரிக்கப்பட்டுள்ளது என்பதை நம்மால் அறிந்துக் கொள்ள இயலுகிறது .மேலும்,

**"………….. பெருந்தழை உதவிச்**

**செயலை முழுமுதல் ஒழிய அயல**

**தரலை மாலை சூட்டி**

**ஏமுற் றன்றிவ் வழுங்க லூரே" (குறுந்.214)**

எனக் கூடலூர்க்கிழார் கூறுகிறார்.இதில், பெருத்த அடியினை உடைய அசோகமரம் ஒழிந்து நிற்ப, அதனோடு தொடர்பற்றதாய் நிற்கும் அலரி மாலையை முருகனுக்குச் சூட்டி வெறியாட்டு நிகழ்த்தினர். இந்த ஆரவாரத்தை உடைய ஊரானது மயக்கமுற்று இருந்தது எனத் தோழி கூறுமுகமாய் இப்பாடல் அமைந்துள்ளது.இதில் வெறியாட்டு நிகழ்த்தப்படும் இடத்தில் முருகனுக்கு அலரிமாலை சூட்டப்பட்டது என்பதனை நாம் அறிந்துக்கொள்ளலாம். மேலும், நெய்தல் திணைப் பாடலொன்று,

**"எறிசுறாக் கலித்த இலங்குநீர்ப் பரப்பின்**

**நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்**

**வெறியயர் களத்தினில் தோன்றுந் துறைவன்"**

**(குறுந்.318)**

என்று கூறுகிறது. இதில், தன்னை நெருங்குகின்றவரைக் கொல்லுகின்ற சுறா மீன்கள் நிறைந்த, கடற்கரையில், மணம்

கமழும் ஞாழற்பூவோடு புன்னை மலரையும் பரப்பி வெறியாடும் இடத்தைப் போலத் தோற்றமளிக்கின்றது என்கிறது. இதன்வழி, வெறியாட்டு நிகழ்த்தும் இடத்தில் பூக்களை பரப்பி அழகுபடுத்தியிருந்தனர்.அது மணம்வீசும் அழகிய இடமாக காட்சியளித்தது என்பதை அறியமுடிகிறது.

மேற்காணும் செய்திகளின்வழி வெறியாட்டு நிகழ்த்தும் இடம் மணல் பரப்பி வேல் பொருத்தப்பட்டு செந்நெல்லின் பொரியினைப் படையலிட்டனர் என்பதும், முருகனுக்கு அலரிமாலையைச் சூட்டினர் என்பதும், அவ்விடத்து பூக்களைப் பரப்பி மணம்வீசும் அழகிய இடமாகக் காட்சியளித்தது என்பதையும் அறிய முடிகிறது.

**வெறியாட்டு நிகழ்த்தும் வேலன்**

முருகனை வேண்டி வெறியாட்டு நிகழ்த்துபவனை வேலன் எனக் குறிப்பிடுகின்றனர்.இவன் இன்றைய கிராமிய பூசாரிகளைப் போன்றவன் எனக் கொள்வர். இதனை,

**"வெறியென உணர்ந்த வேல னோய்மருந்**
**தறியா னாகுதல் அன்னை காணிய**
**அரும்படர் எவ்வம் இன்றுநாம் உழப்பினும்**
**வாரற்க தில்ல தோழி" (குறுந்.360)**

எனும் பாடலில். என் மாறுபாட்டுக்குக் காரணம் எனக்கு " வெறி" என்பதனை உணர்ந்த பூசாரி வேலன், அன்னையின் முன்னிலையிலேயே எம்மை துன்புறுத்தினாலும் பரவாயில்லை. தலைவன் இங்கு வரவேண்டாம் எனக் கூறுவதாய் மதுரை ஈழத்துப் பூதன்றேவனார் கூறுகின்றார். மேலும்,

**"முருகயர்ந் துவந்த முதுவாய் வேல"(குறுந்.362)**

எனும் பாடல், முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்தும் முதிர்ச்சி மிகுந்த வேலனே என்கிறது.மேற்காணும் பாடல்களின் வழி முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்துபவன் வேலன் என்பது அறியப்பட்டது.

**வேலன் வெறியாட்டில் பலியிடுதல்**

வெறியாட்டு எனும் விழா எடுக்கும்போது முருகனுக்கு பலியிடுதல் என்பது நிகழ்த்தப்பட்டது. இதனை,

**"சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி**
**வணங்கினை……….. …….. " (குறுந்.362)**

எனும் குறுந்தொகைப் பாடலில், சிறிய ஆட்டுக்குட்டியை வெட்டிப் படையலிட்டு வணங்கி, அதன் குருதியினைஇவளது நெற்றியில் பூசுகிறாய் எனத் தோழி வேலனிடம் கூறுகிறாள். மற்றுமொரு குறுந்தொகைப் பாடலில்,

**"மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்**
**செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்**
**தோற்ற மல்லது நோய்க்குமருந் தாகா"(குறுந்.263)**

எனும் பெருஞ்சாத்தனாரின் குறிஞ்சித்திணைப் பாடலில், தோழி! பெரிய மலையினிடத்து மேகமானது விளையாடும் நாட்டிற்குரிய தலைவனிடம் தூய்மையான காதல் கொண்ட நாம் இக்களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கிறோம். இதை அறியாமல் ஆட்டுக்குட்டியின் கழுத்தை வெட்டி, அதன் இரத்தத்தோடு கலந்த தினையை பலிபொருளாக இட்டு, ஓடுகின்ற ஆற்றின் நடுவில் இருக்கும் மணல் மேட்டில், பல்வகை இசைக்கருவிகள் முழங்க, வெறியாட்டு நடத்தும் பொழுது, வேலன் மீது தெய்வம் தோன்றியது என்கிறார்.

இவற்றின்வழி வெறியாட்டின் பொழுது முருகனுக்கு ஆட்டுக்குட்டியைப் பலியிட்டு அதன் இரத்தத்தில் தினை அரிசியால் உண்டாக்கப்பட்ட சோற்றை கலந்து பலியிட்டனர் என்பதும் பல்வகை இசைக் கருவிகளை முழங்கினர் என்பதும் அறியப்படுகின்றது.

**வெறியாட்டில் ஆடல்**

வெறியாட்டு விழா எடுக்கும் பொழுது, அந்நிகழ்வை சிறப்பிக்குமாறு ஆடல்களும் ஆடப்பட்டன.இதனை.

**"புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்**
**கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்**
**அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்**
**வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்" (குறுந்.105)**

எனும் நக்கீரரின் குறிஞ்சி திணைப் பாடலில், மலைநாடனுடைய நிலத்தில் விளைந்த, பொன் போன்ற வளமிக்க கதிர்கள், புதியதை உண்ணும் தெய்வத்திற்கு படையலிடுவதற்காக வைக்கப்பட்டிருந்தது. அதை அறியாமல் உண்ட மயிலானது தன் தவற்றை உணர்ந்ததும் வெறியாட்டம் ஆடும் பெண் அழகாக ஆடுவதைப்போல ஆடி வெப்பமுற்று நடுங்கும் எனக் கூறியுள்ளார்.இதன்வழி வெறியாட்டின் போது மகளிர் ஆடல் நிகழ்த்தினர் என்பது அறியப்படுகிறது.

**முடிவுரை**

வேலன் வெறியாட்டு நிகழ்த்துவதற்கு உரியவன்.வெறியாட்டு என்பதற்கு காந்தள் என்ற பெயருமுண்டு.முருகனின் கோயில்

குன்றின் மீது அமைந்திருந்தது.தாயார் தலைவியின் துயர் துடைக்க வெறியாட்டு நடத்த அகவன் மகளை அழைத்து குறி கேட்டாள்.வெறியாட்டு எனும் நிகழ்வுக்கு (விழாவுக்கு) உரியவன் முருகன்.வெறியாட்டு நிகழ்த்தப்படும் இடத்தில் தூய மணல் பரப்பப்பட்டு, வேல் அமைக்கப்பட்டு, மணம்வீசும் மலர்கள் தூவப்பட்டு முருகனுக்கு செவ்வலரி மாலைச் சூட்டினர். பிறகு ஆட்டுக்குட்டியைப் பலியிட்டு அதன் இரத்தத்தில் தினை அரிசியால் உண்டாக்கப்பட்ட சோற்றினைக் கலந்து படையலிட்டனர் என்பதும் அப்போது பெண்கள் ஆடல்களை நிகழ்த்தினர் என்பதும் பல்வேறு இசைக்கருவிகள் இசைக்கப்பட்டன என்பதும் இக்கட்டுரையின் வழி அறியப்பட்டது. இவை இன்று நாம் வழிபடும் முருக வழிபாட்டிலிருந்து முற்றிலும் வேறானது.

**துணைநூற்பட்டியல்**


1. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் (பொருளதிகாரம்), பகுதி-1, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.
2. இளம்பூரணர் (உரை), தொல்காப்பியம் (பொருளதிகாரம்), பகுதி-2, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.
3. சங்கஇலக்கியம்(குறுந்தொகை), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2007.
4. டாக்டர் உ.வே.சாமிநாதையர்(உரை), குறுந்தொகை (மூலமும் உரையும்), டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 2018.
5. புலியூர் கேசிகன் (உரை), குறுந்தொகை (மூலமும் உரையும்), கௌரா பதிப்பகம், சென்னை, 2010.